# பெட்பாட்டில் டி-ஷர்ட் முதல்வரிடம் வழங்கல்

**கரூர்:** கரூர்–மதுரை சாலையில் இயங்கிவரும் எக்கோலைன் நிறுவனம் சாலையில் வீசப்படும் பெட் பாட்டில்களில் இருந்து டிஷர்ட், கோட் உள்ளிட்ட ஆயத்த ஜவுளிகளை தயாரித்து ஏற்றுமதி செய்து வருகிறது.

இங்கு தயாரிக்கப்பட்ட கோட் ஒன்றைத்தான் பிரதமர் மோடி இரு நிகழ்ச்சிகளில் அணிந்து கொண்டார். இந்நிலையில் சென்னையில் நடந்த உலக வர்த்தக மாநாட்டில் கலந்துகொண்ட எக்கோலைன் நிறுவனத்தினர், வேஸ்ட் பெட் பாட்டில்களில் தயாரிக்கப்பட்ட பல்வேறு வகையான ஜவுளிகளை காட்சிபடுத்தினர்.

விழாவில் முதல்வர் ஸ்டாலினுக்கு எக்கோலைன் நிறுவனத்தில் பெட் பாட்டில்கள் கொண்டு தயாரிக்கப்பட்ட டி ஷர்ட்டை நிறுவன இயக்குனர் சங்கர் வழங்கினார்.



சென்னையில் நடந்த உலகவர்த்தக மாநாட்டில் கரூர் எக்கோலைன் நிறுவன இயக்குனர் சங்கர் பெட்பாட்டிலில் இருந்து தயாரிக்கப்பட்ட டி-ஷர்டை முதல்வர் ஸ்டாலினிடம் வழங்கினார்.